4. 1973-74-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. என். கே. பழனிசாமி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த அறிக்கை இந்தச் சர்க்கார் சமர்ப்பிக்கக்கூடிய 7-வது பட்ஜெட். போன வருடம் ரூ. 441 கோடியாக இருந்த வருமானம் இந்த ஆண்டு ரூ. 465 கோடியாக இருக்கிறது. இந்த ஆண்டு 24 கோடி ரூபாய் உபரியாக வருமானம் வருகிறது. சர்க்கார் வரி போடவில்லை. எந்த விதத்தில் இந்த 24 கோடி ரூபாயை மக்கள் அதிகமாகக் கொடுத்து இருக்கிறார்கள் என்றால் அது சர்க்கார் திறமையால் வாங்கக்கூடிய பணம் என்றுதான் சொல்ல முடியும். 1973-74 வருஷத்தில் வருமானம் ரூ. 465 கோடி என்று சொன்னால், அதில் மத்திய சர்க்காரிலிருந்து வரும் பணம், ஜனங்களிடத்தில் வாங்கிய கடன் ரூ. 23 கோடி, நேஷனலைசுடு பாங்கிலிருந்து வாங்கிய கடன் ரூ. 18 கோடி, யூ.என்.ஓ. விடத்திலிருந்து வாங்கிய ரூ. 48 கோடி கடன், இவைகளெல்லாம் அதில் சேர்க்கப்படவில்லை. அப்படிச் சேர்த்தால் இந்த வருடத்தில் வருமானம் ரூ. 600 கோடிக்கு மேல் இருக்கும். 1966-67-ல் ரூ. 224 கோடியாக இருந்த வருமானம் இன்றைக்குக் கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகரித்து இருக்கிறது.

இவ்வளவு வருமானம் அதிகரித்து இருக்கிற நேரத்தில், இந்தச் சர்க்கார் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி, கண்ணொளி வழங்கும் நிதி போன்ற மிஸ்ஸலேனியஸ் ஆக்டிவிடீஸ் போன்றவற்றிற்கும் நிதி வசூலித்து நல்ல முறையில் செயலாற்றி வருகிறது. அதை நான் வரவேற்கிறேன். மற்றும் பங்கிங்காம் கால்வாய்ச் சீரமைப்புத் திட்டத்தையும் நான் வரவேற்றபோதிலும், மக்களை ஆகர்ஷிக்கக்கூடிய, உற்பத்தியைப் பெருக்கும் பெரிய தொழிற்சாலைகளையோ, அணைக்கட்டுத் திட்டங்களையோ இந்த அரசு ஏற்படுத்தவில்லை, இவ்வளவு பணம் வந்தும் செய்யப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். உதாரணமாகச் சொல்லவேண்டுமானால், இந்த அரசு கேரளாவிலுள்ள சர்க்காரோடு கலந்து பேசி, அனுகி. மேற்குத் தொடர்ச்சி மலையில் இருக்கும் இர்ரிகேஷன் சோர்ஸ், பாசன வசதியை உபயோகித்துக் கொண்டிருக்க முடியும். அதே போன்று இன்னும் பரம்பிக்குளம்-ஆளியாறு-லோயர் பவானி போன்ற திட்டங்களையும் பூர்த்தி செய்யவில்லை. அதற்குப் பதிலாக இதுவரையில் திட்டமே

உருவாக்கப்படாத ஒரு திட்டத்தை, சென்னைக்குப் பக்கத்திலே ஒரு துணை நகரை உருவாக்குகிறேன் என்று சொல்லி அதற்காக ரூ. 2 லட்சம் ஒதுக்கி, அதற்கு 'மறைமலைநகர்' என்றும் பெயர் வைத்தாகிவிட்டது.

1966-67-ம் ஆண்டில் கைத்தறித் துணிகள் 3¼ கோடி தான் கொள்முதல் செய்யப்பட்டது என்றும், இன்றைக்கு ரூ. 8 கோடி வரை கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்றும் ஒப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. இன்று இருக்கும் நிலைமைக்கும், அன்று இருந்த நிலைமைக்கும் கணக்கிட்டுப் பார்த்தால் நிலைமைகளில் மாற்றம் அதிகம் இல்லை, பணம்தான் அதிகமாகி இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசாங்கம் தமிழ் நாட்டிற்கு ஐந்தாண்டுத் திட்டத்தில் பங்கு அளித்தது, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 10.8 சத விகித மாகத் தொடங்கி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 9 சத விகிதமாக மாறி, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 7.4 சத விகிதமாகக் குறைந்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 4.7 சதவிகிதமாகத் தேய்ந்து விட்ட நிலை, மத்திய அரசின் மாற்றாந் தாய் மனப்போக்கைக் காட்டுகிறது என்று கூறப்பட்டிருக்கிறது. இது சரியானது தானா என்று இந்தச் சர்க்காரைக் கேட்கிறேன். உதாரணமாக, இந்த பர்சன்டேஜ்க்கு பதிலாக பணமாகப் போட்டிருந்தால் எவ்வளவு கிடைத்து இருக்கும்? முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முதலீடு குறைவாகப் போடப்பட்டது. அன்று நமக்கு அதிகமாகக் கொடுக்கப்பட்டது. இரண்டாம் திட்டத்திற்கு கொஞ்சம் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திற்கும் அதிகமாக ஒதுக்கி யிருக்கிறார்கள். இந்தச் சர்க்கார் கணக்குப்படி பார்த்தால் இந்த 4.7 சதவிகிதம் என்பது முதல் ஐந்தாண்டு திட்டத்திற்கு ஒதுக்கப் பட்ட தொகையைவிட அதிகமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த மாதிரி சொல்லிவிட்டு மத்திய அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மை என்று சொல்வதில் அர்த்தம் இல்லை.

மத்திய சர்க்கார் எதற்கு வேண்டுமென்று கேட்டாலும் கொடுக்கிறார்கள். பஞ்ச நிவாரணம், வெள்ளத் தடுப்பு நிவாரணம் என்று 10 கோடி, 15 கோடி என்று ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்கு

1973 மார்ச் 5] [திரு. என். கே. பழனிசாமி]

நன்றி தெரிவித்து விட்டு, இதற்கு மாற்றுந்தாய் மனப்பான்மை என்று சொல்வது கூடாது. நாம் அதிகமாகக் கேட்டோம், அவர்கள் ஒதுக்கவில்லை, இருப்பினும் நாம் அதிகமாகச் செலவழிக்கிறோம் என்று காட்டி, மத்திய சர்க்கார் மாநில வளர்ச்சிக்குத் தடங்கலாக இருக்கிறது என்று காண்பிப்பது, அதுவும் ஒன்றுக்கு ஒன்று கம்பேர் செய்வது என்பது இந்த அரசின் அடிப்படை நோக்கமாக இருக்கிறது.

என்.ஜி.ஓக்களுக்கு ரூ. 10 கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே விலைவாசி ஏறி இருக்கக்கூடிய நேரத்தில் இந்த ரூ. 10 கையில் கொடுக்காமல் அந்தப் பணத்தை பி.எப்.பில் சேர்த்து இருக்கிறார்கள் என்றால், என்.ஜி.ஓக்கள் மாதாமாதம் அந்தப் பணத்தை பாங்கில் போடுகிறார்கள் என்று அர்த்தம். இந்தச் சபையில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது, மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கு எந்த அளவுக்குப் பஞ்சப்படி கொடுக்கப் படுகிறதோ அந்த அளவுக்கு மாநில அரசு சிப்பந்திகளுக்கும் கொடுக்கப்படும் என்று. அந்த அடிப்படையில் இது என்ன இடைக்கால நிவாரணமா அல்லது இவ்வளவுதானா என்பது சொல்லப்படவில்லை.

வீட்டு வாடகைப்படி ஏற்கனவே சர்க்கார் 12 சதவிகிதம் கொடுத்து வருகிறார்கள். இப்போது 3 சதவிகிதம் தான் அதிகரித்து இருக்கிறார்கள். இன்றையதினம் வீட்டு வாடகை அதிகமாக இருக்கும் நேரத்தில்,—மற்ற மாவட்டங்களில் எடுத்துக் கொண்டாலும் அங்கேயும் அதிகமாக இருக்கிறது—சென்னை நகருக்கு மட்டும் இந்த நிலைமையில்லாமல் மற்ற வட்டங்களுக்கும் இந்த வசதி தரப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடியிருப்பு மனைகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வாங்கித் தருவதற்காகப் பணம் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த மனைகளில் இருப்பவர்கள் 30-35 வருடம் இருக்கிறார்கள். நிலப்பிரபுக்கள் போய் ஒன்றும் செய்ய முடியாது. இந்த நிலையில் சர்க்கார் தனியாக அவர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலச்சீர்திருத்தச் சட்டம் ஒன்று கொண்டுவரப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. குத்தகைதாரர்களுக்கு பர்சேசிங் ரைட்தான் இருக்கிறது, ஆக்குபென்ஸிரைட்ஸ் கிடையாது என்ற